**OS.NO: 117/2024**

**PW 2 :** துக்காராமன்**,** த/பெ**.**அயோத்திப்பிள்ளை

**நாள்** : 12.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் 1 முதல் 4 தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

1–ம் வாதியும், 3–ம் வாதியும் எனது மகன் மற்றும் மகள் என்று சொன்னால் சரிதான். நாங்கள் மூவரும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மகனுக்கு உரிமையானது தாவா சொத்து என்று தாக்கல் செய்துள்ளேன்.

சர்வே எண்.687/1 –ல் 4 ஏக்கர் 24 செட்டில் 2 ஏக்கர் 12 சென்ட் பாத்தியமானது என்று கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். என்னுடன் பிறந்தவர் ஏழுமலை என்பவர் மட்டும் தான் என்று சொன்னால் சரிதான்.

ஏழுமலையின் வாரிசு தாரர்கள் தான் பிரதிவாதிகள் என்று சொன்னால் சரிதான். என் அண்ணன் ஏழுமலைக்கு 1969 – லேயே திருமணம் ஆகிவிட்டது. எனக்கு 1972 –ல் திருமணம் ஆகியது.

எனக்கு திருமணம் ஆகி 1980–ல் தான் தனிக்குடித்தனம் சென்றோம். அதற்கு முன்புவரை ஒரே குடும்பமாக தான் வாழ்ந்து வந்தோம்.

1972 – 1980 வரை நாங்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்ததற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் இல்லை. நான் கூறுவது போல் நானும் எனது அண்ணன் குடும்பமும் ஒரே குடும்பமாக வாழாததால் தான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்து 26.10.1974 அன்று எனது அண்ணன் ஏழுமலை பெயரில் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

எங்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் நான் தாவா சொத்தை கூட்டு குடும்ப வருமானத்தில் வாங்கியதாக நாங்களும், பிரதிவாதிகள் ஏழுமலையின் தனிப்பட்ட வருமானத்தில் கிரையம் பெற்றதாக கட்சியாடி வருகிறோம் என்று சொன்னால் சரிதான்.

26.10.1974 தேதியிட்ட கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தை பதிவு செய்த போது நானும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அதில் கிரைய தொகை ரூ.4 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள கிரைய தொகைக்கு நான் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் எல்லோரும் சேர்ந்து சம்பாதித்தோம் அப்போது கூட்டுக்

குடும்பமாக இருந்தோம் கூட்டு குடும்ப வருமானம் பொதுவில் இருந்ததால் நான் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்று குறிப்பிட்டு கூறமுடியாது. நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் நான் தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை எனது தந்தையின் மூலமாக பணம் கொடுக்கப்பட்டது.

அந்த கிரையம் சுப்பிரமணியிடம் இருந்து பெறப்பட்டது. மேற்படி சுப்பிரமணி உயிருடன் உள்ளாரா இல்லையா என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சுப்பிரமணியத்தையோ அல்லது அவருடைய வாரிசு தாரர்களையோ விசாரித்தால் மேற்படி கிரைய தொகையை எனது தந்தை கொடுத்தாரா அல்லது ஏழுமலை கொடுத்தரா என்பது பற்றிய விவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான்.

சுப்பிரமணியத்தின் வாரிசு தாரர் யாராவது இருந்தால் நான் அவர்களை விசாரிக்க போகிறேனா என்றால் ஆமாம். வாதசாஆ.1 கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பமோ அல்லது இன்னார் என்று நிருபித்தவர் என்று கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் சரிதான்.

அதில் எனது தந்தையும் கையொப்பம் இடவில்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியவில்லை.

மேற்படி கிரைய பத்திரத்திற்கு முத்திரை தாள் யார் பெயரில் எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. வாதசாஆ.1 கிரைய பத்திரத்திற்கு பத்திர செலவு எவ்வளவு கட்டினார்கள் என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

என் அண்ணன் முதன் முதலில் தபால் துறையில் பானாவரத்தில் வேலைக்கு சேர்ந்தாரா என்றால் அவர் எந்த வேலையும் செய்யவில்லை.

நான் 26.02.2018 அன்று அரக்கோணம் கோட்ட அஞ்சல் துறை கண்காணிப்பாளருக்கு கடிதம் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எந்த கடிதம் கொடுக்காததால் மேற்படி துறையினரிடமிருந்து எந்த பதிலும் எனக்கு அனுப்பப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

என் மகன் தாக்கல் செய்துள்ள வாதசாஆ.9 –ல் ஏழுமலை எப்போது தபால் துறையில் வேலைக்கு சேர்த்தார் என்று கேட்காமல் கோவிந்தச்சேரி குப்பத்திற்கு எப்போது வேலைக்கு சேர்ந்தார் என்று தான் கேட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான் அவருடைய நியமன உத்தரவில் 1975–ம் ஆண்டில் கோவிந்தச்சேரி குப்பம் தபால் அலுவலகத்தில் வேலைக்கு சேர்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். வாதசாஆ.9–ல் கேட்கப்பட்டுள்ள முதல் கேள்வியானது வழக்கை திசை திருப்புவதற்காக கேட்கப்பட்டுள்ள கேள்வி என்று சொன்னால் சரியல்ல.

அந்த கேள்விக்கு கொடுத்த வாதசாஆ.10–ல் உள்ள பதிலில் 24.12.1976–ல் ஏழுமலை கோவிந்தச்சேரி குப்பத்திற்கு வேலைக்கு சேர்ந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேற்படி ஏழுமலையினுடைய நியமன உத்தரவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

UDR க்கு முன்பாகவே எனது தந்தை பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டடுள்ளது. அந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

எனது தந்தை பெயரில் வழங்கப்பட்ட பட்டா எண்.23 என்று சொன்னால் சரிதான். என் தந்தை 1985 –ல் இறந்தார்.

என் அப்பா இறந்த பிறகு ஏழுமலையும் நானும் தான் பட்டா மாற்றம் செய்ய மனு அளித்தாக பிராதில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி மனுவை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

மேற்படி மனுவின் நகலை வேண்டி வாதசாஆ.11 –ஐ 29.01.2019 அன்று மனுவை அனுப்பியிருந்தோம் என்று சொன்னால் சரிதான்.

இருவரும் சேர்ந்து மனுவே கொடுக்கவில்லை என்றும், மேற்படி தாலுக்கா அலுவலகத்தில் இருந்து பதில் பெறவேண்டி மேற்படி மனுவை நான் அனுப்பியிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னுடைய வழக்கில் 1974–ல் ஏழுமலை வேலை செய்யவில்லை என்றும் எனது தந்தை தான் வேலை செய்தார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அதுவரை ஏழுமலை எந்த வேலையும் செய்யாமல் இருந்தாரா என்றால் அவர் அஞ்சல் துறையில் வேலை செய்யவில்லை. அஞ்சல் துறையில் வேலைக்கு சேருவதற்கு முன்பு அவர் விவசாயம் செய்து வந்தார்.

1974–ல் ஏழுமலை அஞ்சல் துறையில் வேலைக்கு சேரவில்லை என்று நான் கூறுவதே தவறு என்றம் அவர் 1965–ம் ஆண்டிலேயே மேற்படி துறையில் பணியில் சேர்ந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல.

4 ஏக்கர் 24 சென்டில் எங்களுக்கு பாத்திய நிலத்தின் சக்கு பந்தி மேற்கே ஏழுமலைக்கும் கிழக்கே எனக்கும் எனது தந்தை பிரித்துக்கொடுத்தார்.

எனக்கு பிரித்து கொடுத்த பிறகு 2 ஏக்கர் 12 செட்டிற்கு தனிப் பட்டா எதாவது வாங்கினேனா என்றால் இல்லை. கூட்டு பட்டா இருந்தது.

எனக்கு பாகம் பிரித்தற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால்

வாய்மொழியாக தான் பிரிக்கப்பட்டது. தாவா சொத்தை மட்டும் பிரித்து கொடுத்தாரா அல்லது மற்ற சொத்துக்களையும் பிரித்து கொடுத்தாரா என்றால் எல்லா சொத்துக்களையும் தான் பிரித்துக்கொடுத்தார்.

2 ஏக்கர் 12 சென்டிற்கு அறுதி எல்லை இடப்பட்டதா என்றால் வரப்பு போட்டோம் அது மழையில் கரைந்து விட்டது. நான் கூறுகின்ற வரப்பு 1980–ல் போடப்பட்டது என்று சொன்னால் ஆமாம்.

அதற்கு பிறகு புதிதாக வரப்பு எதுவும் போடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய பாகமான 2 ஏக்கர் 12 சென்டில் நான் வேர்கடலை, துவரை போன்ற மானாவரி பயிரை பயிரிட்டு வருகிறேன்.

நான் பயிர் செய்வதாக கூறுவது அப்பட்டமான பொய் என்று சொன்னால் சரியல்ல. எனது அண்ணன் மகன் ராஜா ராம் 3 –ம் பிரதிவாதி UDR பட்டா தவறுதலாக எனது பெயரும் சேர்க்கப்பட்டுள்ளதாக அதனை சரி செய்து அவர் பெயரில் பட்டா வழங்க வேண்டும் என்று மனு கொடுத்திருந்தாரா என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை.

DRO பிறப்பித்த உத்தவை வாதசாஆ.8 ஆக எனது மகன் தரப்பில் குறியிடு செய்யப்பட்டுள்ளது அதை பற்றி எனக்கு தெரியும். வாதசாஆ.8 –ல் எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும் அதில் 40 ஆண்டு காலம் எந்த பயிரும் வைக்கவில்லை என்று கூறியுள்ளார் என்றும் அதனால் நான் பயிர் செய்கிறேன் என்று அப்பட்டமாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் அவர் இடத்தையே வந்து பார்க்காமல் சாட்சியம் அளித்துள்ளார். நாங்கள் தான் பயிர் செய்து வருகிறேன்.

நாங்கள் பயிர் செய்வதை நிரூபிக்க சாகுபடி அடங்கலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்று சாட்சி கூறினார்.

வாதசாஆ.3 எனது பெயரில் வழங்கப்பட்ட பட்டா பாஸ் புத்தகம். பட்டா எண். 23 ல் தான் தாவா சொத்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அந்த பட்டா எனது பெயரிலும் ஏழுமலை பெயரிலும் கூட்டாக உள்ளது என்று சொன்னால் சரிதான்.

என் அப்பா இறந்த பிறகு தான் வாரிசு சான்றிதழ் கொடுத்து தான் ஏழுமலை மற்றும் எனது பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.12 17:41:06 +0530

II Additional District and Sessions Judge,

Arakkonam.